ஜூன் 11, 2015

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

இனிமையான குழந்தைகளே, இங்கே நீங்கள் செய்ய வேண்டிய முயற்சியானது நினைவில் இருப்பது மட்டுமே ஆகும். இதுவே அனைத்திலும் எளிதான முயற்சியாகும். இதுவே அனைத்திலும் மிகவும் கடினமான முயற்சியும் ஆகும். ஒருவருடைய தந்தையை நினைவு செய்வதை விட எளிதான வேறு ஒன்று இல்லை. ஒரு மகன் பிறந்த உடனேயே, அவர், "பாபா, பாபா," என்று கூற தொடங்குவார். ஒரு மகள் பிறந்த உடனேயே, அவர், "அம்மா, அம்மா" என்று கூற தொடங்குவார். வேறு யாராலும் ஆத்மாவிடம், "குழந்தைகளே, குழந்தைகளே" என்று சொல்ல முடியாது. இது கடவுளின் குடும்பமாகும். ஆத்மாக்களாகிய நீங்கள் அவரை நினைவு செய்து தந்தையிடமிருந்து உங்கள் ஆஸ்தியை பெறுகின்றீர்கள். உங்களுக்கு உடல் உணர்வு இருந்தால் ஆஸ்தியை பெறுவது உங்களுக்கு கடினமாக இருக்கும்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் உங்கள் அன்பான மற்றும் அன்பிற்கினிய குழந்தை என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்வேன். நான் என்னுடைய உடல் ரூபத்தை விட்டுவிட்டு, உங்கள் கண்களிலும் இதயத்திலும் வாழ்கின்ற ஒரு ஒளியாக இருப்பேன். உடல் உணர்வை விட்டுவிடுவதால், நான் என்னுடைய அழகான அதிர்ஷ்டத்தின் கதவைத் திறக்கின்றேன்.

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு: புத்திசாலியான குழந்தைகள் உடனடியாக அவர்கள் ஒரு உலகாய படிப்பின் மூலம் என்ன பெற முடியும் என்பதையும் அவர்கள் இந்த படிப்பின் மூலம் என்ன பெற முடியும் என்பதையும் புரிந்து கொண்டு அவர்கள் என்ன படிப்பு படிக்க வேண்டும் என்பதை முடிவு செய்வார்கள். குழந்தைகளாகிய நீங்கள் உதவியாளர்கள் ஆக வேண்டும். புத்திசாலி ஆகி உங்கள் வாழ்க்கையை தெய்வீக சேவையில் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ளுங்கள்.

நான் என்னுடைய உயர்ந்த அதிர்ஷ்டத்தை பாராட்டும் மனப்பான்மையையும் மற்றவர்களை குறித்து தாராள மனப்பான்மையும் என் வாழ்க்கை தெய்வீக சேவைக்காக உள்ளது என்று தெரிந்து, அதில் உறுதியாக இருக்கிறேன்.

## திருஷ்டி அல்லது தூயப் பார்வை

பாபா ஆத்மாவிற்கு: இது நினைவு கூறப்படுகின்றது: ஓ கடவுளே, உம்முடைய தெய்வீக நாடகம் அற்புதம்! இந்த புகழாரம், இந்த நேரத்தை குறிக்கின்றது. இவ்வாறும் நினைவு செய்யப்படுகின்றது: உங்கள் வழிகளும் வழிமுறைகளும் தனித்துவமானது. ஒவ்வொரு ஆத்மாவும் நடிக்கின்ற பாகமும் கூட தனிதத்துவம் வாய்ந்தது.

இன்று என்னுடைய திருஷ்டியில், வாழ்க்கை என்னும் தனிதத்துவம் வாய்ந்த அரங்கையும் ஒவ்வொரு ஆத்மாவும் அவர்களுக்கான தனிப்பட்ட விலைமதிப்பற்ற பாகத்தை நடிப்பதையும் பார்ப்பேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*